III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.No.249/2020

Deposition of witness for the Respondent/RW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 11-08-2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கனிமொழி | Village | : |
| Father's / Husband's Name | : | லோகன் | Calling | : |
| Age | : | 28 | Taluk | : |

முதல் விசாரணை

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் Legal Manager ஆக பணிபுரிந்து வருகின்றேன். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) எங்களது நிறுவனத்திலிருந்து கொடுத்த அதிகார கடிதம் எ.ம.த.சா.ஆ.1
2) விபத்து பதிவேட்டின் நகல் எ.ம.த.சா.ஆ.2
3) காவல் ஆணையரிடம் கொடுத்த புகாரின் நகல் ஒப்புகை அட்டையுடன். எ.ம.த.சா.ஆ.3

மனுதாரரின் மனுவை 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்திருக்கின்ற விபத்து பதிவேட்டு நகலில் பெயர் என்னும் இடத்தில் Unknown என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும் RTA என்னும் பகுதியில் Self fall from bike என்று குறிப்படப்பட்டிருக்கிறது. கொண்டுவந்தவர் என்ற காலத்தில் 108 ஆம்புலன்ஸ் என்று காட்டப்பட்டுள்ளது. Deceased unconscious என்று காட்டப்பட்டுள்ளது. 108 ஆம்புலன்சை சேர்ந்தவர்கள் அவர்களுக்கு தெரிந்த விஷயத்தைதான் மருத்துவமனையில் சொல்லியிருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ்காரர்களுக்கு புலனாய்வு செய்யும் வேலை கிடையாது என்றாலும் மருத்துவ உதவி வழங்குவது மட்டுமே அவர்களது பணி என்று சொன்னாலும் சரிதான். போலிஸ் புலன் விசாரணை செய்து எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்த பைக்கிற்கு எதிராக முதல் தகவல் அறிக்கை மற்றும்

இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்பவம் நடைபெற்ற தேதியன்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது. காலதாமதம் எதுவும் இல்லை. TN13Q7465 வாகனத்தினை ஓட்டியவர் மற்றும் உரிமையாளர் எவரும் இந்த விபத்திற்கு நாங்கள் காரணமில்லை என்றோ நடைபெறவில்லை என்றோ சொல்லவில்லை என்றால் எங்களுக்கு மறுப்பு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதனை நான் தாக்கல் செய்யவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒரு தலை பட்சமாக ஆக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆணையர் அலுவலகத்தில கொடுத்த புகாரில் எங்களது காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வண்டி involve ஆகவில்லை என்று புகார் கொடுத்திருக்கிறோம். மறுபுலனாய்வு செய்ய வேண்டுமென்று புகார் கொடுத்திருக்கிறோம். இந்த புகார் 22.08.2023 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த புகார் பற்றி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை. இதனை மேல்நடவடிக்கை எடுக்காததனால் மறுவிசாரனை செய்ய மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்படவில்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு 3 வருடங்கள் கழித்து புகார் கொடுத்ததற்கு காரணம் என்னவென்றால கம்பெனி investigation report கிடைக்க லேட் ஆகிவிட்டது. எங்களுடைய investigator போட்ட ரிப்போர்ட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்து காலத்தில் TN13Q7465 வாகனம் எங்களது காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்து பதிவேட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற பதிவுகளை மட்டும் வைத்து நாங்கள் எந்த எதிர்வாதமும் செய்யமுடியாது என்றால் சரியல்ல. போலிசார் சரியான முறையில் புலனாய்வு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கின்ற நிலையில் எங்களது காப்பிட்டு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடப்பாடுடையது என்றால் சரியல்ல. பெயரளவிற்கு தான் ஒரு புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கின்றார்.

மறுவிசாரணை இல்லை.